பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 04 2025 7 15
புதன்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு-கஷ்மீரில் தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் படைகளுக்கு இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுத்துள்ளது.

2. எல்லைதாண்டிய தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பல்வேறு நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

3. மணிப்பூர் மாநிலத்தில் ஆலங்கட்டி மழையல் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்க கூடுதல் மத்திய நிதி உதவியாக 153 கோடியே 36 லட்சம் ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

4. தேசிய வேலைவாய்ப்பு சேவை இணையதளம், வேலை தேடுவோரையும், வேலை வழங்குவோரையும் ஒன்றிணைப்பதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

5. அடுத்த ஆண்டு ஜப்பானில் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் தொடர்ந்து இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் படைகளுக்கு இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுத்துள்ளது.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டிய பகுதியில் நவ்ஷெரா, சுந்தர்பானி மற்றும் அக்னூர் ஆகிய இடங்களுக்கு அருகேயுள்ள பாகிஸ்தான் ராணுவ நிலைகளில் இருந்து நள்ளிரவில் இந்திய நிலைகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து, இந்திய ராணுவ வீரர்கள் உடனடியாக பதில் தாக்குதல் நடத்தி பாகிஸ்தான் படைகளை விரட்டியடித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

எல்லைதாண்டிய தீவிரவாதத்தை ஒடுக்குவதில் இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பல்வேறு நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், சைப்ரஸ், பனாமா, சோமாலியா, ஸ்லோவேனியா மற்றும் கயானா நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களைத் தொடர்பு கொண்டு பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து விளக்கி கூறினார்.

அப்போது பேசிய இந்த நாடுகளின் அமைச்சர்கள் பஹல்காம் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததாக திரு. ஜெய்சங்கர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தீவிரவாதத்தை அனைத்து வகையிலும் ஒடுக்குவதற்கு இந்தியாவுக்கு இந்த நாடுகள் ஆதரவு தெரிவித்ததாகவும் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<>>>>

பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் கட்சியின் நிலைப்பாட்டை அனைத்து நிர்வாகிகளும் பின்பற்ற வேண்டும் என காங்கிரஸ் நிர்வாகிகளை அக்கட்சி அறிவுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கே.சி. வேணுகோபால், கட்சியின் செயற்குழு தீர்மானம் மற்றும் கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட நிர்வாகிகள் தெரிவிக்கும் கருத்துகள்தான் அதிகாரபூர்வமானவை என்றார்.

இவர்களது நிலைப்பாட்டிற்கு மாறாக எந்த கருத்தையும் தெரிவிக்க வேண்டாம் என்றும் அவர் கட்சி நிர்வாகிகளை கேட்டுக்கொண்டார்.

இதனிடையே பிரதமருக்கு எதிராக கருத்து தெரிவித்து வெளியிட்ட சமூக ஊடகப் பதிவை காங்கிரஸ் கட்சி நீக்கியுள்ளது.

<<<>>>

மணிப்பூர் மாநிலத்தில் ஆலங்கட்டி மழையல் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்க கூடுதல் மத்திய நிதி உதவியாக 153 கோடியே 36 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் இந்த உதவி, மாநில் பேரிடர் நிவாரண நிதியின் நிலுவைத் தொகையை சரிசெய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதில் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு துணைநிற்கும் என்றும் உள்துறை அமைச்சக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<>>>

தேசிய வேலைவாய்ப்பு சேவை இணையதளம், வேலை தேடுவோரையும், வேலை வழங்குவோரையும் ஒன்றிணைப்பதாக உள்ளது என மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

அடுத்த 2 ஆண்டுகளில் 50 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் தொழிலாளர் நல அமைச்சகத்திற்கும், ராப்பிடோ நிறுவனத்திற்கும் இடையே புதுதில்லியில் நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு. மன்சுக் மாண்டவியா, தேசிய வேலைவாய்ப்பு சேவை இணையதளத்தில் ஒரு கோடியே 75 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலை தேடுவோரும், சுமார் 40 லட்சம் வேலை வழங்குவோரும் பதிவு செய்திருப்பதாக கூறினார்.

உள்ளூர் அளவிலான வேலைவாய்ப்புகளை வழங்குவதில் இந்த இணையதளம் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக சரக்குப் போக்குவரத்துத் துறையில் 5 லட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. மாண்டவியா தெரிவித்தார்.

<<<>>>

மக்கள் அதிக அளவில் கண் தானம் செய்ய முன்வர வேண்டும் என மகாராஷ்டிர மாநில ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மும்பையில் உள்ள தனியார் கண் மருத்துவமனை நிகழ்ச்சியில் பேசிய அவர், தாமும் கண் தானம் செய்ய இருப்பதாக கூறினார்.

கிராமப்பகுதிகள், பழங்குடியினர் மற்றும் தொலைதூர பகுதிகளில் கண் பரிசோதனை முகாம்களுக்கு ஏற்பாடு செய்யுமாறும் கண் மருத்துவமனைகளை அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் உள்ள ஏழை மக்கள் அனைவருக்கும் அதிநவீன கண் சிகிச்சைகள் கிடைக்கும் வகையில் நடமாடும் கண் மருத்துவ சேவைகளை வழங்குமாறும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<<<>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் சார்தாம் யாத்திரை இன்று தொடங்குகிறது.

இதையொட்டி குளிர்கால தலமான **Mukba** கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த கங்கா தேவி சிலை **Bairav Ghatt**-ல் நடைபெற்ற சிறப்பு பூஜைகளுக்குப் பிறகு நேற்று கங்கோத்ரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இன்று காலை பத்தரை மணிக்கு கங்கோத்ரி ஆலயம் திறக்கப்பட்டு சிறப்பு ஆராதனைகள் நடைபெற உள்ளது.

இதேபோன்று கர்சாலியில் வைக்கப்பட்டிருந்த யமுனா தேவி சிலையும் இன்று காலை யமுனோத்ரிதாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மேலும் கேதார்நாத் ஆலயம் வரும் வெள்ளிக்கிழமையும், பத்ரிநாத் ஆலயம் வரும் ஞாயிற்றுக்கிழமையும் பக்தர்களுக்கு திறக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் தீண்டாமையை ஒழிக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமையின் குறியீடாகவும் கருதப்படும் 'காலனி' என்ற சொல் ஆவணங்களில் இருந்து நீக்கப்பட்டால் மட்டும் போதுமா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆட்சியிலும், கட்சியிலும் உருவாக்கி வைத்திருக்கும் காலனிகளை நீக்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் வினவியுள்ளார்.

ஏற்கனவே வேங்கைவயல் விவகாரத்தில் இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் நடவடிக்கை எடுக்காத நிலையில் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் பானம்பட்டு கிராமத்திலும் குடிநீர் தொட்டி மீது மனித கழிவு பூசப்பட்டிருப்பதையும் திரு. எல். முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுக ஆட்சியில் பட்டியலின மக்கள் படும் துன்பங்களுக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் சாலை மற்றும் ரயில் கட்டமைப்பு திட்டங்களை விரைந்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற கட்டமைப்பு திட்டக் குழுவின் 92வது கூட்டத்தில் பல்வகை போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதுடன், சரக்குப் போக்குவரத்தையும் திறம்பட கையாள்வதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரயில்வே மற்றும் சாலைப் போக்குவரத்து அமைச்சக உயரதிகாரிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில் தலைநகர் தில்லி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு பயனளிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து பயண நேரத்தை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உயிர்காக்கும் அத்தியாவசிய மருந்துப்பொருட்கள், ஏழை, எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் மத்திய அரசு மக்கள் மருந்தகம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்படும் மக்கள் மருந்தகங்களால் தங்களது மருத்துவச் செலவு பெருமளவு குறைந்துள்ளதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

இந்தியா உடனான வர்த்தக உடன்படிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாக அமெரிக்க நிதியமைச்சர் திரு. **Scott Bessent** தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். புதிய வரி விதிப்புகள் குறித்து இந்தியாவுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் சுமூகமாக நடைபெற்று வருவதாக கூறினார்.

கூடுதல் வரி விதிப்பை தவிர்ப்பதற்கான இருதரப்பு உடன்படிக்கையில் இந்தியா விரைவில் கையெழுத்திடும் என்றும் திரு. **Scott Bessent** நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அடுத்த ஆண்டு ஜப்பானில் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் தொடர்ந்து இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கலப்பு தற்காப்புக் கலை போட்டிகளும் புதிதாக ஆசிய விளையாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி 14 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 204 ரன் எடுத்தது.

205 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி, 190 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்றைய போட்டியில் சென்னை அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி சென்னையில் இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

மும்பையில் நடைபெற்று வரும் பில்லியர்ட்ஸ் கிளாசிக் போட்டியில் இந்தியாவின் முன்னணி வீரரான திரு. பங்கஜ் அத்வானி தமது முதலாவது போட்டியில் **Tathya Sachdev**-ஐ வென்றார்.

இதேபோன்று **Rishab Thakkar** மற்றும் **Rohan Jambusaria** ஆகியோரும் தத்தமது போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

**<<<<The End>>>>**